

# நரசிம்மன் பதில்கள்

உங்கள் கேள்விகளை கேட்பதற்கு
**MAISON DES MEDIAS** 22, Rue Perdonnet, 75010 Paris, France
narasimmanpathilkal@gmail.com

வழமையாக கொழும்பில் தங்கியிருக்கும் டக்ளஸ் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கிறாரே?

**சீ.விமல்ராஜ் – இலண்டன்**

சிறீலங்கா ஜனாதிபதித் தேர்தலை முடிவுசெய்யும் பலம் தமிழர்களிடம் உள்ளதால் எந்தப் பகுதியில் எப்படி வாக்கு மோசடி செய்து மகிந்தவரை வெற்றி கொள்ளச் செய்யலாம் என்பதற்காகவே அவர் யாழ் குடாவில் தங்கி இருந்தார். ஆனால், மக்கள் தெளிவாக இருந்ததால் அவரது கணக்கு பொய்த்துப் போய் விட்டது. இப்போது, தனக்குத்தான் அரசியல் ஞானோதயம் உள்ளதுபோலவும் மக்களுக்கு அரசியல் அறிவு இல்லை என்பதுபோலவும் மக்கள் மீதே குற்றம் சாட்டத் தொடங்கியிருக்கிறார். எல்லாம் போடுகின்ற எலும்புக்கு விசுவாசம்தான் வேறொன்றுமில்லை.

தமிழ் தேசியத்திற்காக பாடுபட்டவர்கள் குறித்து விமர்சிப்பதை நரசிம்மன் நிறுத்தவும். தமிழ் தேசியத்திற்காக பாடுபட்டவர்கள் தேசியத் தலைவர் குறித்து தெரிவிக்கும் கருத்தில் பொய் இருக்க முடியுமா?

**கே.ராகுலன் – பரிஸ்**

குற்றம் செய்பவர் நமது ஆளாக இருக்கின்றார் என்பதற்காக மௌனமாக இருந்துவிட முடியாது. தேசியத்திற்காகப் பாடுபட்டவர்கள் அதனை அழிக்க முயலும்போது மௌனமாக இருப்பது அதற்கு ஒத்துழைப்பதுபோல்தான். தமிழீழத் தேசியத் தலைவர் குறித்து எந்த நிரூபிக்கக்கூடிய ஆதாரமும் இல்லாமல் கதை சொல்பவர்களின் கருத்தை எவ்வாறு நம்புவது..? தேசியத் தலைவர் குறித்து ஈழமுரசு பத்திரிகை ஆரம்பத்தில் செய்தி வெளியிட்டபோது, முன்னர் தமிழ் தேசியத்திற்காக பாடுபட்டதாகக்கூறும் ஒருவர், “தேசியத் தலைவர் குறித்த செய்தியை வெளியிடுவதற்கு முன்னர் அது சரியானதுதானா என்று பிரான்சின் விடுதலைப் புலிகளின் பணியாளர்களிடம் உறுதிப்படுத்தினீர்களா?” என கேள்வி எழுப்பியிருந்தாராம். அவர் இப்போது கூட்டம்போட்டு தேசியத் தலைவருக்கு பால் வார்த்துவிட்டதாக கூறுவது எதற்காக, எந்த ஆதாரத்தின் அடிப்படையில்? என்று தெரியவில்லை.

தேர்தலில் சரத் பொன்சேகா வெற்றி பெற்றால் இராணுவ ஆட்சி வரும் என்றும், தமிழர்களுக்கு முன்பைவிட ஆபத்தானது என கூறப்படுகின்றதே? யார் வந்தாலும் எமக்கு விடிவு இல்லையா?

**எஸ்.சங்கரன் – இலண்டன்**

நீங்கள் குறிப்பிட்டது போல் சரத் வெற்றி பெறவில்லை. அவர் வெற்றிபெற்றாலும் அது அறிவிக்கப்படாத சூழ்நிலையை மகிந்த ராஜபக்ச உருவாக்கியிருந்தார். சரத் தங்கியிருந்த விடுதியை தேர்தல் முடிவு அறிவிப்பதற்கு முன்னரே படையினரின் சுற்றிவளைப்பிற்கு உள்ளாகி இருந்ததில் இருந்து யார் தயார் நிலையில் இருந்தார்கள் என்பது புரியவில்லையா? அதோடு, பேரினவாத சிந்தனை கொண்ட யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்களுக்கு விடிவு கிடையாது.

இணையத்தில் உங்கள் பத்திரிகையை பார்ப்பதற்கு ஏற்பாடு செய்ததற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு நடந்த வட்டுக்கோட்டை தீர்மான மீள் வாக்களிப்பு தொடர்பான அறிவித்தலை தமிழ் தொலைக்காட்சி ஒன்றில் வாக்களிப்பு முடிந்த பின்னர் மட்டும் அறிவித்தார்களே. இதில் யார் தவறு விட்டிருக்கலாம்?

**என்.ரூபன் – ஜேர்மனி**

மக்கள் கரங்கொடுத்து தொலைக்காட்சி நடத்துவதாக கூறிக்கொள்பவர்கள், அந்த மக்களுக்காக அதனை நடத்தவில்லைப்போலும். மக்களின் கருத்தை அறியும் இவ் வாக்கெடுப்பை மற்ற விளம்பரங்களைப் போல் கட்டண விளம்பரமாகவே ஒளிபரப்பினார்கள் என்கிறார்கள் தேர்தல் ஏற்பாட்டாளர்கள். பிரான்சில் நடந்த வட்டுக்கோட்டை வாக்கெடுப்பிற்கு, பணத்தை செலுத்தியபின் கூட பல்வேறு காரணங்களைக் கூறி இழுத்தடித்து இறுதியில் தேவைப்படாத பொழுதில் ஒளிபரப்பினார்கள் என்று பிரான்ஸ் ஏற்பாட்டாளர்கள் குற்றம்சாட்டினார்கள். மக்கள் பணத்தில், யாருக்கு நடக்கிறதோ வேலை..?




நரசிம்மன் அவர்களே, தமிழர்களுடைய இராணுவத் தாக்குதல்களைவிட தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசியல்ப் போர் அரசாங்கத்திற்கு அழகான தோல்விகளை கொடுக்குமா..? (தமிழர்கள் எல்லோரும் ஒற்றுமையாகிய நிலையில்)

**செம்மலை கீர்த்தனன் – இலண்டன்**

'ஆயிரம் மேடைப் பேச்சுக்களை விட ஒரு கெரில்லா தாக்குதல் மிகச்சிறந்த பிரச்சாரம்' என்று தனது அனுபவத்தின் மூலம் கூறியவர் பிடல் கஸ்ரோ. தமிழர்களுக்கு இந்த அரசியல் பலத்தைத் தந்ததே, தமிழர்களிடம் இருந்த இராணுவ பலம்தான். அந்த அரசியல் பலத்தை சிந்தாமல், சிதறாமல் தக்கவைத்தால் சிறீலங்காவை நிச்சயமாகத் தோற்கடிக்க முடியும். அதற்கு தமிழர்களின் ஒற்றுமை எனும் பலம் மிக அவசியம்.

# மாவீரன் முத்துக்குமார் நினைவு நிகழ்வுகள்

ஈழத்தமிழர் மீதான இனவெறிப் போரைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தி தீக்குளித்த வீரத் தமிழ்மகன் முத்துக்குமாரின் முதலாம் ஆண்டு நினைவு தினம் நாளை வெள்ளிக்கிழமை (29.01.2010) கடைபிடிக்கப்படுகின்றது. இதனையொட்டி தமிழகமெங்கும் பல்வேறு அமைப்புகள் நினைவேந்தல் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்நிகழ்வுகளை தடுப்பதற்கும் தடைவிதிப்பதற்கும் தமிழக கருணாநிதி அரசு முடிவு செய்துள்ளதாக தெரியவருகின்றது. இந்நிலையில், முத்துக்குமாரின் நினைவு தினத்தை அனுஷ்டிக்க அனுமதி




கேட்டு சென்னை உயர் நீதிமன்றில் மனுதாக்கல் செய்யப்பட்டது. இது குறித்து ‘காற்றுக்கென்ன வேலி’ திரைப்பட இயக்குனர் வி.டி.புகழேந்தி சென்னை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது, வீரத் தமிழன் முத்துக்குமார் வீரவணக்க நிகழ்வு குழுவின் அமைப்பாளராக இருக்கிறேன். கடந்த 50 ஆண்டுகளாக இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக பல்வேறு சம்பவங்கள் நடந்து வருகின்றன. அங்கு நடக்கும் இனப்படுகொலையில் 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் உயிரிழந்துவிட்டனர். 3 இலட்சம் பேர் குடியிருப்புகளை இழந்துள்ளனர். இந்த நிலையில், கடந்த ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட கடுமையான போர் காரணமாக தமிழர்களுக்கு பெருத்த இன்னல் ஏற்பட்டது. இதை கண்டித்து சென்னை நுங்கம்பாக்கம் சாஸ்திரிபவனில், பத்திரிகையாளர் முத்துக்குமார் 29.1.2009 அன்று தீக்குளித்து மரணம் அடைந்தார். இது நாடு முழுவதும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

அதைத்தொடர்ந்து இந்த பிரச்சினையில் 18-க்கும் மேற்பட்டோர் தீக்குளித்தனர். தற்போது வரும் 29-ந் தேதி (வெள்ளிக்கிழமை) முத்துக்குமாரின் முதலாம் ஆண்டு நினைவு தினம் வருகிறது. அதை அனுஷ்டிப்பதற்காக ஒரு குழுவை அமைத்துள்ளோம். 29ம் திகதி சென்னை கொளத்தூரில் இந்த குழுவின் சார்பில் அவரது முதலாம் ஆண்டு நினைவு தினத்தை அனுஷ்டிக்க திட்டமிட்டுள்ளோம். இதில், பல அரசியல் கட்சி தலைவர்கள் கலந்துகொள்ள உள்ளனர். எனவே இந்த நிகழ்வுக்காக அனுமதி கேட்டு கொளத்தூர் காவல்துறை ஆணையாளர்கள் வரை மனு கொடுத்தோம். ஆனால், இந்த மனுவை அவர்கள் பரிசீலிக்கவில்லை. எனவே, தகுந்த உத்தரவை வழங்க காவல்துறையினருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியுள்ளார். மனுவை உடனடியாக பரிசீலிக்க வேண்டும் என்று காவல்துறையினருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதேவேளை, வீரத்தமிழ் மகன் முத்துகுமார் அவர்களுக்கும், இன்னும் ஈழத்தழிழினத்திற்காக அக்கினித்தீயின் வாய்க்குள் இரையாகிப்போன அனைத்து தமிழ் மான வீரர்களையும் இதயத்தின் கனத்தவலியுடன் நினைவு கூர்ந்து எமது வீரவணக்கம் செலுத்துகின்றோம் என்று பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவை தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, கொடிய சிங்களவனின் தமிழர் இன அழிப்பை பொறுக்காது கைகொடுக்க வேண்டிய இரத்த உறவுகளான தமிழ்நாட்டு மக்களும், அதன் மாநில அரசுகளும், கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டு நடிப்பையும், நாடகத்தையும் நடாத்திக் கொண்டிருந்த போது, தன்னைத் தானே தீ மூட்டி தமிழ்நாட்டு தமிழ்ச்சகோதரர்களுக்கு சூடேற்றி தம்மை மாய்த்துக்கொண்ட எம் இதய தெய்வங்களான எம் மாவீரர்களே!

கலைமான்களால் ஆமைகளுக்கு வேகத்தை கற்றுக் கொடுக்க முடியாமல் போனது பரிதாபத்திற்குரியது தான். அதேபோல தமிழ் எங்கள் உயிர், மூச்சு என்றும் தமிழின தலைவன் தாம் என்றும் தம்மைதாமே சொல்லிக் கொள்பவர்களுக்கு உயிருடன் தமக்கு தாமே தீ மூட்டி, தம்மை அக்கினியில் சங்கமமாக்கி தமிழனாய் இரு, தமிழனை வாழவை பின்னர் தமிழினத்தலைவனாய் வா என்று உணர்த்தி சென்றீரே! தம் இனம் அழியும் போது உரியவர்கள் இவர்கள் கண்ணிருந்தும் குருடாகவும், காதிருந்தும் செவிடராகவும் இருந்ததற்கு நாம் என்ன செய்ய முடியும். ஆனால் நாம் இழந்தது ஆற்றலும், அறிவும், அளப்பரிய அர்ப்பணிப்பும் கொண்ட அரும்பெரும் செல்வங்களான உங்களையல்லவா?

ஈழத்தமிழன் இனம் காக்க 2002ல் தீயில் தியாகத்தை புரிந்த கவரிமான் அப்துல் ரகுமான் முதல் புலம்பெயர் மண்ணில் தன்னினத்திற்கு நீதி வேண்டி ஜெனீவா ஐ.நா முன்னிலையில் தீமூட்டிய உருகிப்போன குமரேசன் வரையும் அளப்பரிய தியாகங்கள். மாவீரர்களே மரணம் உங்களை ஒழித்து வைத்தாலும், மாபெரும் மௌனம் எம்மை இப்போது சூழ்ந்து கொண்டாலும், உங்கள் உணர்வுகளும், இதயத்துடிப்புகளும், எம் இதயத்தில் கேட்கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.